13th March 1954]

Collection of higher rate of rent by the Shandy Contractor of Peravurani, Tanjore district.

* 136 *Q.*—SRI S. RAMALINGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any complaint on or after 11th August 1953 from the public of Peravurani, Pattukkottai taluk, Tanjore district, against the shandy contractor for collecting more than the prescribed rate of rent from the merchants and vendors; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI K. RAJARAM :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI S. RAMALINGAM :— " கனம் மந்திரியினுடைய பதிலைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இந்த விஷயத்தை அச்சடித்து நோட்டீஸ் மூலமாக விநியோகம் செய்திருக்கிறார்கள், சர்க்காருக்கும் அனுப்பியிருக்கிறார்கள், அதன் நகலை எனக்கும் அனுப்பி இருக்கிறார்கள். அதன் பிறகுதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இருந்தாலும் கனம் மந்திரி அவர்கள், சர்க்காருக்கு புகார் எதுவும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள்."

MR. SPEAKER :—" நகலை அனுப்பி விட்டு இதைப் பற்றி கேளுங்கள்."

SRI S. RAMALINGAM :—" நகலை அனுப்பவேண்டிய முறைகளையெல்லாம் அனுஷ்டித்துப் பார்த்த பிறகு தான் சர்க்காருக்கு அவர்கள் மகஜர் அனுப்பி இருக்கிறார்கள். ஜில்லா போர்டு அதிகாரி அதை விசாரித்த பிறகும் அங்கு இப்படி நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக கூட்டம் போட்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். அதன் நகல் சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த நகல் எனக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பிறகுதான் நான் சர்க்காரை இதைப்பற்றி கேட்கிறேன். இனிமேலாவது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று கேட்கிறேன்."

THE HON. SRI K. RAJARAM :—" Sir, the Government have not received any complaint like this but, if the hon. Member feels that there is such a complaint, the proper procedure is to approach the District Board concerned and lodge a complaint with the Special Officer. If he is not satisfied with the result of any enquiry or any such step taken by the Special Officer, the Government could be approached. The Government would then cause necessary enquiries to be made and see what could be done."

SRI S. RAMALINGAM :—" பேராவூரணி சந்தை குத்தகைக்காரர் அதிகப்படியாக வசூல் பண்ணுகிறார் என்று சர்க்காருக்கு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இல்லையென்றால் இந்த சட்டசபை முன்பு இதை நான் சொல்லுகிறேன். இதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமாறு சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

THE HON. SRI K. RAJARAM :—" Sir, I would request the hon. Member to send the complaint to me."